Department of Wildlife Conservation | No. 811-A, Jayanthipura Road, Battaramulla | Email - dg@dwc.gov.lk | www.dwc.gov.lk

UK International Development
Partnership | Progress | Prosperity

ஆதாமின் பாலம் தேசிய பூங்காவின்

முகாமைத்துவ மதிப்பாய்வு

மன்னார், வடமேற்குக் கரையோரம்

இது எதைப் பாதுகாக்கின்றது?



ஆதாம் பாலம் தேசிய பூங்கா, இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள இது, கடற்கரை மற்றும் கடல் சுற்றுசூழல் அமைப்புகளின் தனித்துவமான தொகுப்பைப் பாதுகாக்கின்றது.
இப்பூங்கா, பிரவுன் நோடி மற்றும் பல்வேறு டெர்ன் (கடல் பைங்கணக்கு) இனப் பறவைகள் போன்ற கடலோரப் பறவைகளுக்கு முக்கியமான வாழிடமாகவும், இவற்றின் இனப்பெருக்க மைதானங்களை வழங்குகின்றது. மேலும், ஆலிவ் ரிட்லி, ஹாக்ஸ்பில் ஆமைகள் போன்ற கடல் ஆமைகளின் கூடு கட்டும் தளமாக மட்டுமின்றி அழிந்து வரும் டியூகாங் (கடல் பசு) போன்ற கடல் விலங்குகளின் இனப்பெருக்க மையமாகவும் இப்பகுதி திகழ்கின்றது.

இங்குள்ள சுற்றுசூழல் அமைப்புக்களான கடற்பாசி படுக்கைகள், பவளப் பாறைகள், மணல் மேடுகள், மணல் திட்டுகள், சதுப்பு நிலங்கள், உப்பங்கழிகள் இவை அனைத்தும் இப்பூங்காவின் செழுமையான உயிரியல் பன்மைக்கு பங்களிக்கின்றன.

ஜூன் 2015 இல், விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு ஆணையின் கீழ் (அத்தியாயம் 469) ஒரு தேசிய பூங்காவாக நியமிக்கப்பட்டது.

அளவு : 189.9 சதுர கிமீ

அடையாளம் காணப்பட்ட அச்சுறுத்தல்கள்

- சட்டவிரோதமாக வேட்டையாடுதல்
- பருவநிலை மாற்றம்
- சட்டவிரோத மீன்பிடி
- ஆமைகள் மற்றும் துகாங்குகளின் (கடல்பசு) பிடிப்பு
- வண்டல் அரிப்பு
- மாசுபாடு
- ஊடுருவும் தாவரங்கள் (ப்ரோசோபிஸ் ஜூலிஃப்ளோரா)
- உள்ளூர் உள்கட்டமைப்பு (சாலைகள், மின் இணைப்புகள் மற்றும் கப்பல் பாதைகள்)
- நில உரிமைகள் மற்றும் சட்டவிரோத குடியேற்றங்கள
- பூர்வீகம் அல்லாதவைகள் (நாய்கள் மற்றும் கால்நடைகள்)

முக்கிய வெற்றிகள்

1. இலங்கை மற்றும் இந்தியாவின் வாழிடங்கள் மற்றும் உயிரினங்களுக்கான சுற்றுச்சூழல் முழுமையான பாதுகாப்பை வழங்கும், இலங்கையின் ஒரே எல்லைக்கப்பாற்பட்ட பாதுகாக்கப்பட்ட பகுதி இதுவாகும்.
2. விலங்கு மற்றும் தாவர பாதுகாப்பு சட்டத்தின் கீழ் தேசிய பூங்காவாக சட்டபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
3. பள்ளி மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் அரசாங்கத்திற்கான கல்வி திட்டங்கள் ஆகியவற்றில் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.
4. குளிர்காலத்தில் வலசை வரும் பறவை இனங்கள் குறித்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது இந்த இடத்தை ராம்சார் தளம் எனப் பட்டியலிடுவதற்கு உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
5. வனவிலங்கு பாதுகாப்புத் துறையின் (DWC) வருடாந்த வேலைத் திட்டத்தின் மூலம் சில செயல்பாடுகள் முகாமைத்துவம் செய்யப்படுகின்றன. இது பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கான குறிப்பிட்ட நடவடிக்கைகளை அடையாளப்படுத்துகின்றது.
6. தேசிய பூங்காவின் புரிதல் மற்றும் முகாமைத்துவத்திற்கு இலங்கை அரசின் துறைகள் மற்றும் இந்திய தரப்பினருடன் வனவிலங்கு பாதுகாப்புத் துறை (DWC) இணைந்து செயல்படுகின்றது.

பாதுகாக்கப்பட்ட பகுதியின் முகாமைத்துவ செயல்திறன் பற்றிய மதிப்பாய்வு

ஒரு பாதுகாக்கப்பட்ட பகுதி நியமிக்கப்பட்டவுடன், அது எவ்வளவு சிறப்பாக நிர்வகிக்கப்படுகின்றது என்பதைப் புரிந்துகொள்வது முக்கியம். முகாமைத்துவ செயல்திறனை மதிப்பிடுவதற்கு பல்வேறு முறைகள் பயன்படுத்தப்படலாம். பயன்படுத்தப்படும் மிகவும் பொதுவான முறைகளில் ஒன்று முகாமைத்துவ செயல்திறன் கண்காணிப்பு கருவி (METT-4). இது ஐந்து முகாமைத்துவ கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்ட 38 கேள்விகளுக்கு பதிலளிப்பதை உள்ளடக்கியது:

திட்டமிடல்
பாதுகாக்கப்பட்ட பகுதி சட்டம், வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் ஆகியவற்றின் மதிப்பீடு.

உள்ளீடுகள்
வளங்களின் மதிப்பீடு: பணியாளர்கள், நிதியறிக்கை, உபகரணங்கள் மற்றும் வசதிகள்.

செயல்முறை
முகாமைத்துவம் நடாத்தப்படும் விதத்தின் மதிப்பீடு.

வெளியீடுகள்
முகாமைத்துவ நடவடிக்கைகளை செயல்படுத்துதல்; தயாரிப்புகள்/சேவைகளை வழங்குதல் ஆகியவற்றின் மதிப்பீடு.

விளைவுகள்
பாதுகாக்கப்பட்ட பகுதியின் இலக்குகள் அடையப்பட்ட அளவு மதிப்பீடு.

நாங்கள் செய்தவை

ஆதாமின் பாலம் தேசிய பூங்காவின் முகாமைத்துவத்தினை கிடைக்கக்கூடிய ஆதாரங்களை மதிப்பாய்வு செய்து, ஜனவரி 22, 2024 அன்று DWC அதிகாரிகளின் நிபுணதத்துவ கருத்துக்களை பயன்படுத்தி, கடல் நாட்டு கூட்டுத் திட்டம் மற்றும் வனவிலங்கு பாதுகாப்புத் துறை (DWC) ஆகியன மதிப்பீடு செய்தன. எது சிறப்பாகச் செயல்படுகின்றது என்பதையும், முகாமைத்துவத்தினை மேம்படுத்த உதவும் முக்கிய நடவடிக்கைகளையும் நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம்.

தொடர்புடைய தரப்புகள்

மதிப்பாய்வில் ஈடுபட்டுள்ள துறைகள்:

அரசாங்கம்

ஒரு முகாமைத்துவக் கூறுக்கான METT மதிப்பெண்

43 — 117



வாழிடம்/இனங்கள்	நிலை	போக்கு
வலசைப்பறவைகள் / இடம்பெயர்வு பறவைகள்: (உணவு மற்றும் கூடு கட்டும் பகுதிகள்)	நடுநிலை	அறியப்படவில்லை
கடல் சுற்றுச்சூழல் வாழிடங்கள்: (கூத்தபாசிகள், பவழப்பாறைகள், சதுப்புநிலக் காடுகள் (Mangroves), மணல் மேடுகள், கண்ணாம்புக் கற்களின் திட்டுகள்.	நடுநிலை	அறியப்படவில்லை
அழிந்து வரும் உயிரினங்கள்: கடல் பசுக்கள் மற்றும் ஆமைகள்	நடுநிலை	அறியப்படவில்லை

அடுத்த நடவடிக்கைகள்

வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் இந்த மதிப்பீட்டின் முடிவுகளை எதிர்காலத்திற்கான முன்னுரிமைகளைத் தீர்மானிப்பதற்காகப் பயன்படுத்தும்

முகாமைத்துவத்தினை மேம்படுத்தும் முக்கிய நடவடிக்கைகள்

- அடுத்த ஐந்தாண்டுகளுக்கான முக்கிய நிர்வாக நடவடிக்கைகளை கோடிட்டு, தரப்பினர்களின் உள்ளீட்டிற்கான வாய்ப்புகளை வழங்கும் ஸ்மார்ட் (குறிப்பிட்ட, அளவிடக்கூடிய, அடையக்கூடிய, தொடர்புடைய, காலக்கெடு) எனப்படும் முகாமைத்துவத் திட்டத்தை உருவாக்கவும்.
- தேசிய பூங்காவின் கடல் வாழிடங்கள் மற்றும் உயிரினங்களுக்கான இலக்குகளை உருவாக்குதல். இது அச்சுறுத்தல்களைக் கட்டுப்படுத்தவும் பாதுகாப்பளிக்கவும் உதவும்.
- தேசிய பூங்காவிற்கான வனவிலங்கு பாதுகாப்புத் துறையின் (DWC) காப்பாளர் ஒருவரை நியமித்தல். முகாமைத்துவத்திற்காக அப்பகுதியில் நிரந்தர தளம் அமைப்பதன் தேவையை மதிப்பாய்வு செய்தல்.
- முக்கிய அச்சுறுத்தல்களுக்கான இணக்கம் மற்றும் சட்ட அமுலாக்க மூலோபாயத்தை உருவாக்குதல்.
- இலங்கை அரசின் பிற துறைகள், அரசு சாரா நிறுவனங்கள் (NGOs), மற்றும் உள்ளூர் சமூகங்களுடன் கூட்டு ஒத்துழைப்பு உறவுகளை வலுப்படுத்துதல். இது தேசிய பூங்காவின் கண்காணிப்பு, முகாமைத்துவம் மற்றும் ஆய்வினை ஆதரிக்கும்.